



# ஸ்ரீ சேஷ ஒளி

திருவருட்சுடர்

நிர்வாக ஆசிரியர் : குருஜி கே.வி.எல்.என். சர்மா



ஒளி - 11 காலாண்டிதழ் ஜனவரி - மார்ச் 2017 கதிர் - 1


## விண்ணில் தெரியும் மண்ணுலகம்

## மன அமைதி தரும் மாடம்பாக்கம்





'விண்ணுலகம் மண்ணில் தெரிகிறது' என்று சொல்லும் போதும் ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா! ஆமாம். ஆச்சரியம்தான். எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடக்கும் போதும் மகிழ்ச்சிக் குரிய சம்பவங்கள் நிகழும்போதும் ஆச்சரியம் கலந்த சந்தோஷம் நக்குள்ளே ஏற்படுகிறது. இது மனித இயல்பு. மனிதனால் முடியாத விஷயங்களை மனிதனாக பிறந்த புனிதரான மகான்கள் செய்வார்கள். மகான்களை நோக்கி நமது வாழ்க்கை பயணம் இருந்தால் மகிழ்ச்சி கரமான சம்பவங்களும், ஆச்சரியங் களும், அற்புதங்களும் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கும். மரணமில்லா பெரு வாழ்வை அடைந்து இன்றும் மகான்கள் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறாகள். வழிகாட்டி கொண்டும் இருக்கிறார்கள். அப்படி தலைசிறந்த மகான் ஆன உலக மகா சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின் ஆராதனை விழா நமது 18 சித்தர் சக்தி பீடத்தில் வெகு சிறப்பாகவும், விமரிசை யாகவும் நடைபெற்றது. கணபதி ஹோமம், கோ பூஜை, சந்தான கோபால கிருஷ்ணன் ஹோமம், சுதர்சன ஹோமம், காமேஸ்வர, காமேஸ்வரி திருக் கல்யாணம் சத்குரு தங்கபாதுகை பூஜை, சௌபாக்கியலக்ஷ்மி பூஜை ஆகியவை கள் சிறப்பாக நடந்து திருவீதியுலாவுடன் ஆராதனை நிறைவுற்றது. சிறப்பு அம்ச மாக அமெரிக்கா-பூஸ்டனில் இருந்து வந்த செல்வி சம்யுக்தா - ஹரியின் பரத நாட்டியம் சிறப்பாக நடைபெற்றது. இதை யெல்லாம் சிந்தித்து பார்க்கும்போது வர்தா புயலால் புரட்டி போடப்பட்ட நிலையில் ஆலயத்தில் கூரைகள் பறந் தோடி மரங்கள் எல்லாம் விழுந்து சீரழிக்கப்பட்ட நிலையில் இந்த விழா நடக்குமா? என்ற கேள்விகுறி மனதில் எழுவது இயற்கைதானே! எதிர்பாராத புனர் நிர்மாண செலவுகளும், விழாச் செலவும் பின்னி பிணைந்து இணைந்து வேதனையையும் சோதனையையும் அதிகரித்துக் கொண்டே இருந்தது. இது காலத்தின் கட்டாயம் என்றாலும், கண்ணீர் துளிகளை தவிர்க்க இயல வில்லை.

கலங்காமல் காத்திருக்க காவலர்கள் போல 18 சித்தர்களும், தெய்வங்களும், ஸ்ரீ கிருஷ்ணனும், சத்குருவும் இருக்கும் போது கண்ணீர் பன்னீராக மாறும். புயல் மாறி தென்றலாக வீசும். இருள் போய் ஒளி கிடைக்கும். குப்பைகள் போய் பரிசுத்த மான நிலை கிடைக்கும். உதவிகரம் மும்பை புரவலர்களிடமிருந்து, சென்னை அன்பர்களிடம் இருந்தும் கிடைத்தது. சீரழிக்கபட்ட சிதிலமடைந்த ஆலய மேற் கூரை சீரமைக்கப்பட்டது. சிறப்பாக விழா நடந்தேறியது. பூஜைகள் இன்றும் நடந்து கொண்டேதான் இருக்கின் றன. புயல்ஆனாலும், சுனாமி ஆனாலும், மழையானாலும், பஞ்ச பூதங்களை வேண்டி செய்த "பஞ்ச பூத சாந்தி" வேள்வி ஆலயத்தையும் மக்களையும் காப்பாற்றியது என்பது தான் உண்மை. எவ்வளவு முறை வேண்டுமானாலும் சத்குரு நாதருக்கு நன்றி சொல்லி கொண்டே இருக்கலாம்.

அற்புதம் செய்யும் இந்த மகானுக்கு ஜனவரி 18 ஆம் தேதி யன்று ஜெயந்தி விழா (பிறந்த நாள்) வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. கணபதி ஹோமம், கோ பூஜை, ஐஸ்வர்ய குபேர லக்ஷ்மி ஹோமம் போன்ற நிகழ்வுகள் நடைபெற வுள்ளன. தொல்லையே வாழ்க்கை யாக வறுமையின் உச்ச கட்டத்தில் இருப்பவர்கள் இந்த விழாவில் பங்கேற்றால் ஆச்சர்யம் அற்புத பலன்கள் நடக்கும் என்பது உறுதி. **மண்ணுலகில் தோன்றும் விண்ணு** லகமாக மனஅமைதி தரும் மாபெரும் பரிகார தலமாக மாடம் பாக்கம் சித்தர்கள் பீடம் காலத்தால் அழிக்கமுடியாத கடல் போல் அருளை வாரி வழங்கும் என்பது சத்தியம்.

-குருஜி சர்மா


**ஸ்ரீ சேஷஒளியில் சந்தாதாரராகி ஸத்குருவின் திருவருள் பெறுங்கள்**

சந்தா ரூ. 101/-

# பரவசம் தந்த அனுபவங்கள்

*''கருணாசாகரம் சாந்தம் அருணாசலவாசினம்*
*ஸ்ரீசேஷாத்ரி குரும்வந்தே பிரம்மேபூதம் தபோநிதம்''*

பெருமதிப்பிற்குரி சேஷ பக்தர்களுக்கு என் சிரம் தாழ்ந்த வணக்கங்கள்.

மீண்டும் இந்த இதழ் மூலமாக உங்கள் சந்திப்பதில் பெருமகிழ்ச்சிடைகிறேன்.

சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் ஒரு மாபெரும் கருணைக்கடல். அவரது கருணைக்கு அளவே கிடையாது. என்ன வேண்டும் உங்களுக்கு? ஓடி வாருங்கள். பதினெண் சித்தர் சக்தி பீடத்திற்கு. சத்குரு அருள் அள்ளி அள்ளி வழங்குவார். அவரிடம் ஜாதி மத இன வேறுபாடு கிடையாது. ஒன்றே தெய்வம்! எல்லோரும் ஓர் குலம் என்பது சித்தர்களின் வாக்கு. மொழியோ, ஜாதியோ, இனமோ அவர்களுக்கு முக்கியமில்லை. அவர்களின் அருளைப் பெறுபவர்கள் மனித ஜீவன்களாகவோ அல்லது மற்ற ஜீவராசிகளாகவோ இருக்கலாம். சித்தர்கள் அருளை வழங்குவதற்கு உயர்திணை, அஃறிணை என்று வேறுபாடு பார்ப்பதில்லை. ஒரு பூச்சி கூட சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் அருளைப் பெற்று சொர்க்கத்தை அடையும். அப்படி இருக்கும்போது மனிதர்களாகிய நாம் எவ்வளவு கொடுத்து வைத்தவர்கள்.

தினமும் சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளையும் பதினெட்டு சித்தர்களையும் வீட்டில் வணங்கி பிரார்த்தனை செய்யுங்கள். வாரம் ஒரு முறையோ அல்லது முடிந்தபோதெல்லாம் பதினெண் சக்தி பீடத்திற்கு வந்து உங்கள் பிரார்த்தனையையும், கோரிக்கைகளையும் வைத்து வழிபடுங்கள். உங்கள் வேண்டுதல்கள் எல்லாவற்றையும் சித்தர்கள் நிறை வேற்றுவார்கள்.

சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் நல்லன எல்லாவற்றையும் நமக்கு குறிப்பால் உணர்த்துவார். இந்த வருடம் நாங்கள் பழனி பாதயாத்திரைக்கு வடபழனி முருகன் கோவிலில் முருகனை வழிபட்டு விட்டு ரெயில்வே ஸ்டேஷனிற்கு கிளம்னோம். நான் சேஷாத்ரி ஸ்வாமிகளிடம் இந்த வருடம் பழனி பாதயாத்திரயும், தரிசனமும் நன்கு அமைய வேண்டும் என்று மனதுக்குள் பிரார்த்துவிட்டு காருக்குள் ஏறி அமர்ந்தேன். என்ன அதிசயம்? எங்கள் காருக்கு முன்னால் ஒரு கார் புறப்பட்டது. அதன்பின் பக்க கண்ணாடியில் யாமிருக்கப் பயமேன்? என்ற வாசகத்துடன் முருகனின் படம் போட்டு பாம்பன் ஸ்வாமிகள் துணை என்ற போர்டுடன் அந்த கார் சென்றது. சத்குரு சரியான முறையில் உத்தரவு கொடுத்தது. அப்போது எனக்கு அந்த குறிப்பால் புரிந்தது. அதுமட்டுமல்ல, அடுத்தடுத்த நிகழ்வுகளும் சத்குரு கருணை கடல் என்பதை எங்களுக்கு புரிய வைத்தது.

எந்த வருடமும் இல்லாத அளவிற்கு இந்த வருடம் பழனியில் நாங்கள் தங்குவதற்கு அற்புதமான ஒரு இடம் கிடைத்தது. முருகனின் தரிசனம் சொல்ல வார்த்தையில்லை. பழனி மலையில் வேலை செய்யும் அன்பர் ஒருவர் எங்களை அழைத்துச் சென்று கூடவே இருந்து ''சாயட்ச சேவை'' எனும் அபிஷேகம் முடிந்து ராஜ அலங்காரத்துடன் கூடிய முருகனின் அற்புதத் திருக்காட்சியை சுமார் ஒரு மணி நேரம் எங்களை முருகனின் முன்னால் அமர வைத்து தரிசனம் செய்யச் செய்தார். அத்துடன் அவ்வளவு பெரிய கூட்டத்தில் சிறிதும் சிரம மில்லாமல் எங்களை ''ரோப் கார்'' மூலமாக பழனி அடிவாரத்திற்கும் அழைத்து வந்து விட்டுச் சென்றார். ''என்னே சத்குருவின் கருணை?'' அள்ளி அள்ளி கொடுக்கும் அமுதசுரபியின் அன்னையல்லவா அவர் பக்தர்களே!

சத்குருவை..
உயிருக்குள் வைத்து உணர்ந்து கொள்ளுங்கள்!
உலகுக்கு உரக்க எடுத்துச் சொல்லுங்கள்!
கருணைக் கடல் சத்குருவின் அருளால்
நம் எல்லோருடைய வாழ்க்கையிலும்
வருங்காலம் எழில் கூடட்டும்
வாழ்க்கை வளமாகட்டும்!
மீண்டும் அடுத்த இதழில் உங்களை சந்திக்கிறேன்

மருதபரணி

## குரு கீதை



1. த்வம்பிதா த்வஞ்ச மே மாதா
த்வம் பந்து ஸ்த்வஞ்ச தேவதா
''ஸம்ஸாரபீதி – பங்காய
தஸ்மை ஸ்ரீகுரவே நம''

நீரே என் தந்தை, நீரே என் தாய் நீரே உறவு நீரே தெய்வம் பிறவியின் பயத்தைப் போக்கும் அப்படிப்பட்ட குருவாகிய உமக்கு நமஸ்காரம்.

2. யத் ஸத்வேன ஜகத் ஸத்யம்
யத் ப்ரகாசேன பாதி யத்
யதானந்தேன நந்தந்தி
தஸ்மை ஸ்ரீ குரவே நம:

எவருடைய உண்மையால் உலகம் உண்மையோ, எவருடைய பிரகாசத்தால் உலகம் பிரகாசிக்கிறதோ எவருடைய ஆனந்தத்தால் உலகினர் மகிழ்ச்சி அடைகின்றனரோ அந்த குருவிற்கு நமஸ்காரம்.

3. யஸ்மின் ஸ்தித–மிதம் ஸர்வம்
பாதி யத்பான – ரூபத
யத்ப்ரீத்யா ப்ரியம் புத்ராதி
தஸ்மை ஸ்ரீ குரவே நம:

எவருடைய உண்மையால் உலகம் உண்மையோ, எவருடைய பிரகாசத்தால் உலகம் பிரகாசிக்கிறதோ எவருடைய ஆனந்தத்தால் உலகினர் மகிழ்ச்சி அடைகின்றனரோ அந்த குருவிற்கு நமஸ்காரம்.

## சக்தி பீடத்தில்

### முக்கிய தினங்கள்

**ஜனவரி 2017**

| | |
|---|---|
| 12 | பௌர்ணமி |
| 13 | போகி பண்டிகை |
| 14 | பொங்கல் |
| 15 | மாட்டுப் பொங்கல் |
| 18 | மகான் ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் ஜெயந்தி விழா ஹஸ்தம் |
| 27 | தை அமாவாசை |

**பிப்ரவரி 2017**

| | |
|---|---|
| 3 | ரதசப்தமி |
| 10 | பௌர்ணமி |
| 14 | ஹஸ்தம் |
| 26 | அமாவாசை |

**மார்ச் 2017**

| | |
|---|---|
| 12 | பௌர்ணமி |
| 14 | காரடையார் நோன்பு ஹஸ்தம் |
| 27 | அமாவாசை |

18 சித்தர் சக்தி பீடத்திற்கு பஸ் ரூட்
தாம்பரம் வேளச்சேரி வழியாக
ராஜ கீழ்ப்பாக்கம் வந்து தெற்கே
3 கி.மீ. சென்றால் அருள்மிகு தேனுபுரீஸ்வரர்
சிவன் கோயிலுக்கு அருகில்

**ஸ்ரீசக்ர மஹாமேரு**
**ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்**
**18 சித்தர்கள் சக்திபீட**
**பிருந்தாவனம்**
அமைந்துள்ளது.

முகவரி எண். 1, சன்னதி தெரு,
மாடம்பாக்கம், சென்னை - 600 126.
போன் : 044-22281408, 22280407,
29710972, 8754486723
பாலாலயம் : 2228 1337

பஸ் ரூட் : தாம்பரத்திலிருந்து 51G, 51K
தி.நகரிலிருந்து 5A Cut Service
குரோம்பேட்டையிலிருந்து S3, S10 மினி பஸ்
இறங்குமிடம் : சிவன் கோயில்

**SRI SESHADRI SWAMIGAL TRUST - MUMBAI OFFICE ADDRESS**
A-11, Room No. 8, Ground Floor,
Shahid Bhagat Singh, CHS Ltd.,
Bindra Complex, Mahakali Caves
Road, Near Holi Spirit Hospital,
Andheri, Mumbai - 93. Ph : 28387116

## சேஷாத்ரி ஸ்வாமிகள் ஜெயந்தி விழா

18-1-2017 புதன்கிழமையன்று கணபதி ஹோமம், கோ பூஜை, குபேர ஐஸ்வர்ய ஹோமம், சித்தர்கள் வேள்வி இவைகளுடன் நடைபெறவுள்ளது. அன்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு பலன் அடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

# ராசி பலன்கள்

அன்பர்கள் அனைவருக்கும் 2017 ஆம் புத்தாண்டு வாழ்த்துக்கள்

## ஜனவரி - மார்ச் 2017

## மேஷம்



(அசுவினி, பரணி, கார்த்திகை முதல் பாதம்)

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அஷ்டமச்சனியின் ஆதிக்கம் தெரிகிறது. குருபகவான் 6ம் இடத்தில் மறைந்துள்ளார். பொருளாதாரத்தை திட்டமிட வேண்டும். கணவன், மனைவி உறவு சாதாரணமாக இருக்கும். பணியாளர்கள் நிதானத்துடன் செயல்படவேண்டும். பெண்களுக்கு மருத்துவச் செலவு தெரிகிறது. மாணவர்கள் ஓரளவு நன்றாகப் படிப்பார்கள். சின்னத் திரை கலைஞர்களுக்கு புதிய முயற்சி வெற்றித் தரும். அரசியல்வாதிகள் சொத்துக் களில் முதலீடு செய்யவேண்டாம். விவசாயி களுக்கு அரசாங்க உதவி கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாக அமையும்.

*அதிர்ஷ்ட எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னி மலை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 21 முதல் 24 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அஷ்டமகுருவின் பாதிப்பு இருக்கிறது. எதிலும் எங்கும் நிதானம் தேவை. கணவன், மனைவி உறவு வழக்கம்போல் இருக்கும். பணியாளர்கள் அவசர முடிவுகளை எடுக்க வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் சுமாரான லாபம் அடைவார்கள். பெண் களுக்கு எதிர்பாராத திருப்பம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். அயல்நாட்டு பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் கொடுக்கும். அரசியல்வாதிகளுக்கு மருத்துவர் செலவு ஏற்பட இடமுண்டு. விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : முருகன், செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : மகாபோகர் சித்தர், புலிப் பாணி சித்தர், கிழமை : செவ்வாய்க் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 18 முதல் 20 தேதி வரை முக்கியமான முடிவு களை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ராஜயோகம் ஏற்பட்டுள்ளது. அஷ்டம சனி விலகி விட்டதால் நீண்ட நாள் தடைபட்ட விஷயங்கள் அனுகூலமாக மாறும். காதல் -திருமணத் தடை அகலும். கணவன்-மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு நல்ல செய்தி தேடி வரும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் லாபம் அடைவார்கள். பெண்களுக்கு மன மகிழ்ச்சி ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர் களுக்கு கடல் பிரயாணம் ஆதாயம் கொடுக்கும். அரசியல்வதிகளுக்கு பதவி தேடிவரும். விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளி யம்மன், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கி ழமை. சந்திராஷ்டம தினங்கள் 17 முதல் 19 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## ரிஷபம்



(கார்த்திகை 2, 3, 4, பாதம் ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 பாதம்)

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குரு பலம் கூடியிருப்பதால் காதல்-திருமணம் கைகூடும். கணவன்-மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார் கள். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பெண்களுக்கு ஆபரண சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். வெள்ளித்திரை கலைஞர்கள் வெளிநாடு செல்வார்கள். அரசியல்வாதிகளுக்கு எதிரிகளால் ஆபத்து உண்டு. எச்சரிக்கை! விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாக அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழி பட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண் டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 24 முதல் 26 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் உச்சமடைந்துள்ளார். குருபலம் கூடி யுள்ளது. எதிலும், எங்கும் வெற்றி கிடைக்கும். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். காதல்-திருணம் கை கூடும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கலைஞர்களுக்கு புதிய முயற்சி வெற்றித் தரும். அரசியல்வாதிகளுக்கு வெளிநாட்டு பிரயா ணம் ஆதாயம் கொடுக்கும். விவசாயிகள் நல்ல லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாக அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்ச நேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சி'ததர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ் டம தினங்கள் : 20 முதல் 23 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப் பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் உச்சமடைந்துள்ளார். எதிலும் எங்கும் வெற்றி கிடைக்கும். காதல்-திருமணம் கைகூடும். தொழிலதிபர்கள், வியாபாரிகள் அதிக லாபம் அடைவார்கள். பெண்களுக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். சின்னத் திரை கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். தடைப்பட்ட திருமணம் நடக்கும். அரசியல்வாதிகள் பொறுப்புடன் நடக்கவேண்டும். விவசாயி களுக்கு நண்பர்களால் ஆதாயம் உண்டு. பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழி பட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண் டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 19 முதல் 22தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப் பதைத் தவிர்க்கவும்.*

குருஜி கே.வி.எல்.என். சர்மா

## மிதுனம்



(மிருகசீரிஷம் 3, 4 பாதம் திருவாதிரை, பூனர்பூசம் 1, 2, 3 பாதம்)

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். 10ம் இடத்தை குரு பார்ப்பதால் பணியாளர்களுக்கு பதவியில் ஸ்திரத் தன்மை ஏற்படும். வியாபாரிகள், தொழில திபர்கள் லாபம் அடைவார்கள். பெண் களுக்கு தந்தை வழி சொத்தில் பகுதி கிடைக்கும். மாணவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்கள், சொத்துக்களில் முதலீடு செய்வதைத் தவிர்க்க வேண்டும். அரசியல்வாதிகளுக்கு எதிரிகளால் தொல்லை உண்டு. எச்சரிக்கை! விவசாயிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழி பட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண் டிய சித்தர்கள் : மகாபோகர் சித்தர், புலிப் பாணி சித்தர், கிழமை : செவ்வாய் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 26முதல் 29 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். கணவன், மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். சில அன்பர்களுக்கு புதிய சொத்துச் சேர்க்கை ஏற்படும். பணியாளர் களுக்கு மாதம் பிற்பகுதியில் சம்பள உயர்வு, பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடை வார்கள். பெண்களுக்கு மருத்துவச் செலவு ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற் றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு திடீர் பிரயாணத்தால் ஆதாயம் உண்டு. சகோதர, சகோதரிகளால் அரசியல்வாதிகளுக்கு தொல்லை ஏற்படும். விவசாயிகளுக்கு சுமா ரான லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்கள் நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழி பட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண் டிய சித்தர்கள் : பட்டினத்தார் சித்தர், கடு வெளி சித்தர், கிழமை : ஞாயிற்றுக் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 23 முதல் 25 தேதி வரை முக்கியமான முடிவு களை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் பாக்யஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். பணியாளர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் ஏற்படலாம். கடல் வாணிபம் செய்யும் வியாபாரிகள், தொழிலதிபர்கள் லாபம் அடைவார்கள். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். மாணவர்கள் அதிக கவனத்துடன் படிக்கவேண்டும். கலைஞர்களுக்கு எதிர்பாராத நல்ல தகவல் வரும். அரசியல்வாதிகள் கௌரவிக்கப்படு வார்கள். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். பொதுவாக இந்த மாதம் முற்பகுதி யில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணா மூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 22 முதல் 24 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## கடகம்



(பூனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்)

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். பேச்சில் நிதானம் தேவை. கணவன், மனைவி உறவு வழக்கம் போல் இருக்கும். பணியாளர்கள் எச்சரிக்கையுடன் செயல் படுவது நல்லது. வியாபாரிகள், தொழிலதி பர்கள் அதிக பண முதலீடு செய்ய வேண்டாம். பெண்களுக்கு குடும்பத்தில் மனஸ்தாபம் ஏற்பட்டு அகலும். மாண வர்கள் ஓரளவு நன்றாகப் படிப்பார்கள். கலை ஞர்கள் பிரயாணத்தின்போது எச்சரிக்கை யாக இருக்கவேண்டும். அரசியல்வாதிகள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். விவசாயிகள் கடன் வாங்குவதை தவிர்க்க வேண்டும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளி யம்மன், கிழமை : வெள்ளிக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளி. சந்திராஷ்டம தினங்கள் : 1 முதல் 3 தேதி வரை, 29ம் தேதி முதல் 31ம் தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். பண முடக்கம் ஏற்படும். பேச்சில் கவனம் தேவை. கணவன், மனைவி இடையே சிறு, சிறு சலனம் ஏற்பட்டு அகலும். வியா பாரிகள், தொழிலதிபர்கள் அவசர முடிவுகள் எடுக்கவேண்டாம். பெண்களுக்கு மர்ம உறுப்புகளில் கோளாறுகள் ஏற்படும். மாணவர்கள் சுமாராகப் படிப்பார்கள். கலை ஞர்கள் கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கை யாக இருக்க வேண்டும். அரசியல்வாதி களுக்கு சொத்துத் தகராறு ஏற்பட்டு விலகும். விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் எச்சரிக்கையுடன் இருந்தால் நல்ல பலன் களை அடையலாம்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை : ஞாயிற்றுக் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 25 முதல் 27 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் பாக்கியம் அடைந்துள்ளார். விட்டுக் கொடுத்து பழகுதல் நலம். அவசர முடிவுகள் எடுக்கவேண்டாம். வியாபாரிகள், தொழி லதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். கொடுக்கல், வாங்கலில் பெண்கள் எச்சரிக் கையுடன் இருக்க வேண்டும். மாணவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். அரசியல்வாதி களுக்கு வருமான வரித்துறையில் தொல்லைகள் உண்டு. விவசாயிகள் பிரயாணத்தின்போது எச்சரிக்கையாக இருக்கவும். பொதுவாக இந்த மாதம் முற் பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண் மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற் கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 24 முதல் 26 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## சிம்மம்



(மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் 5ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குரு பலம் கூடியிருக்கிறது. திருமணத்தடை அகலும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு கடல் பிரயாணம் பயன் தரும். அரசியல்வாதிகள் புதிய பதவியை அடைவார்கள். விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 3 முதல் 6 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் 5ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ராசியில் இருக்கும் ராகுவால் சிறு, சிறு சலனங்கள் ஏற்பட்டு விலகும். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். கணவன், மனைவி விட்டுக் கொடுத்து பழகுதல் நலம். பெண்கள் பிறர் உதவிக்குச் செல்ல வேண்டாம். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். கலைஞர்கள் புதிய தொடர்பினால் ஆதாயம் அடைவார்கள். பெண் அரசியல்வாதிகள் கவனத்துடன் செயல்பட வேண்டும். விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 27 முதல் 2 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். மனக்குழப்பங்கள் ஏற்பட்டு அகலும். கணவன் மனைவி விட்டுக் கொடுத்து பழகுதல் நலம். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் எதிர்பாராத லாபம் அடைவார்கள். பெண்களுக்கு புனிதப் பயணம் ஏற்படும். மாணவர்களுக்கு எதிர்பாராத திருப்பம் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு சொத்துச் சேர்க்கை ஏற்படும். விவசாயிகளுக்கு வாகன யோகம் உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 26 முதல் 29 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## கன்னி



(உத்திரம் 2, 3, 4 பாதம், ஹஸ்தம், சித்திரை 1, 2 பாதம்)

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் 4ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். சோதனைகள் ஏற்பட்டு அகலும். கணவன், மனைவி உறவு வழக்கம் போல் இருக்கும். பணியாளர்கள் அவசர முடிவுகளை எடுக்க வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு பண நெருக்கடி ஏற்படும். எச்சரிக்கை. பெண்களுக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படும். மாணவர்கள் கவனத்துடன் படிப்பது நல்லது. கலைஞர்களுக்கு உடல்நிலையில் திடீர் கோளாறு ஏற்படும். அரசியல்வாதிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். விவசாயிகளுக்கு எதிர்பாராத நல்ல திருப்பம் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 6 முதல் 8 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் 4ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். சோதனைகள் ஏற்பட்டு அகலும். பணியாளர்கள் மாதப் பிற்பகுதியில் லாபம் அடைவார்கள். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தைத் தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு மருத்துவச் செலவு ஏற்படும். மாணவர்கள் கவனமாகப் படிக்க வேண்டும். கலைஞர்கள் கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அரசியல்வாதிகள் சூழ்ச்சியில் மாட்டிக் கொள்வார்கள். கவனம் தேவை. விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி கிழமை : சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 2 முதல் 4 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரும்பத்தில் உங்கள் ராசி நாதன் 6ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். மனதில் வீண் குழப்பம் ஏபட்டு அகலும். பொருளாதார சீர்திருத்தம் செய்து கொள்ள வேண்டும். பணியாளர்கள்கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கையாக இருக்கவும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தைத் தவிர்க்க வேண்டும். கணவன், மனைவி விட்டுக் கொடுத்து பழகுதல் நலம். பெண்கள் பேச்சில் கவனமாக இருக்கவும். மாணவர்களுக்கு வீண் பயம் ஏற்பட்டு அகலும். கலைஞர்களுக்கு மருத்துவுச் செலவுகள் ஏற்பட இடமுண்டு. அரசியல்வாதிகள் சொத்துத் தகராறில் ஈடுபட வேண்டாம். விவசாயிகளுக்கு ஓரளவு கடன் நிவாரணம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிகிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய்க் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 1 முதல் 3 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## துலாம்



(சித்திரை 3, 4 பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3, பாதம்)

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் 5ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குடும்பத்தில் சுப விரயங்கள் ஏற்படும். வீண் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். கணவன், மனைவி உறவு வழக்கம்போல் இருக்கும். பணியாளர்களுக்கு பொருள் சேர்க்கை ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். பெண்களுக்கு பிரயாணத்தால் லாபம் உண்டு. மாணவர்கள் அதிக கவனத்துடன் படிக்க வேண்டும். கலைஞர்களுக்கு சோதனை ஏற்பட்டு அகலும். அரசியல்வாதிகளுக்கு பிள்ளைகளால் வீண் செலவு உண்டு. விவசாயிகளுக்கு புனித பயணம் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் நல்ல பலன்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், கிழமை : சனிக்கிழமை, ராகு காலம், வழிபட வேண்டிய சித்தர்கள் : ஸ்ரீ கபிலர் சித்தர், கருவூரார் சித்தர், கிழமை : ஞாயிறு. சந்திராஷ்டம தினங்கள் : 8 முதல் 10 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 5ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். சுபவிரயங்கள் குடும்பத்தில் ஏற்படும். பணியாளர்களுக்கு சுபச் செய்தி வந்து சேரும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். குழந்தைகளால் பெண்களுக்கு கவலை ஏற்படும். மாணவர்கள் கவனமாகப் படிக்கவேண்டும். கலைஞர்கள் சொத்துக்களில் முதலீடு செய்ய வேண்டாம். கணவன், மனைவி உறவு சுமாராக இருக்கும். அரசியல்வாதிகளுக்கு திடீர் பிரயாணம் ஏற்படும். விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் ஓரளவு நல்ல பலன்கள் நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 1, நிறம் : ரோஜா, கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 4 முதல் 6 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் உச்சமடைந்துள்ளார். சுபவிரயங்கள் குடும்பத்தில் ஏற்படும். திருமணம் கைகூடும். பணியாளர்களுக்கு புதிய சொத்துச் சேர்க்கை ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். பெண்கள் உடல் நலத்தில் கவனம் செலுத்தவேண்டும். மாணவர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் உண்டு. கலைஞர்களுக்கு புதிய திருப்பம் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத பணம் கிடைக்கும். விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : முருகன், செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய்க் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 3 முதல் 6 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## விருச்சிகம்



(விசாகம் 4ம் பாதம், அனுஷம்,கேட்டை )

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் 4ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். கேதுவுடன் சஞ்சரிப்பதால் அதிக கற்பனை ஏற்படும். அதற்கு இடம் தரவேண்டாம். பணியாளர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் உண்டு. காதல்-திருமணம் கைகூடும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். பெண்களுக்கு சிறு சிறு குழப்பம் ஏற்பட்டு நீங்கும். மாணவர்கள் நன்றாகப் படிப்பார்கள். சின்னத்திரை கலைஞர்களுக்கு புதிய திருப்பம் ஏற்படும். அரசியல்வாதிகள் கௌரவிக்கப் படுவார்கள். விவசாயிகளுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 10 முதல் 12 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் 4ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். மனதில் வீண் குழப்பம் ஏற்பட்டு அகலும். காதல்-திருமணம் ககைகூடும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு அபிவிருத்தி ஏற்படும். பெண்களுக்கு மகிழ்ச்சிகர சம்பவம் நடக்கும். மாணவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். அயல்நாட்டு உறவு நல்ல முறையில் இருக்கும். அரசியல்வாதிகளுக்கு உடன்பிறப்புகளால் தொல்லை ஏற்படும். விவசாயிகள் பிரயாணத்தில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். பொதுவாக இந்த மாதம் ஓரளவு நல்ல பலன்கள் நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய்க் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 6 முதல் 8 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் 5ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரை சனியின் பாதிப்பு உண்டு. அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். காதல்-திருமணம் கைகூடும். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். பெண்களுக்கு பொருள் சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். அயல்நாட்டு பிரயாணம் கலைஞர்களுக்கு ஆதாயம் கிடைக்கும். திடீர் பிரயாணத்தால் அரசியல்வாதிகளுக்கு ஆதாயம் உண்டு. விவசாயிகள் கௌரவிக்கப்படுவார்கள். பொதுவாக இந்த மாத பிற்பகுதியில் நல்ல பலன்கள் கிடைக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 6 முதல் 8 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## தனுசு



(மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம் )

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். கணவன், மனைவி உறவு வழக்கம்போல் இருக்கும். பணியாளர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள், கடன் வியாபாரத்தைத் தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு இளைய சகோதர, சகோதரிகளால் செலவு ஏற்படும். மாணவர்களுக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. கலைஞர்கள் அவசர முடிவுகளை எடுக்க வேண்டாம். அரசியல்வாதிகளுக்கு சொத்துச் சேர்க்கை எற்படும். விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாக அமையும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜ காளியம்மன் கிழமை : வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை, சந்திராஷ்டம தினங்கள் : 12 முதல் 14 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். எதிலும், எங்கும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். பணியாளர்கள் வழக்கம் போல் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அரசாங்கத்தால் வியாபாரிகளுக்கு, தொழிலதிபர்களுக்கு தொல்லை ஏற்பட இடமுண்டு. கணவன், மனைவி உறவு வழக்கம் போல் இருக்கும். பெண்களுக்கு உடன் பிறப்புகளால் ஆதாயம் உண்டு. மாணவர்கள் அதிக அக்கறையுடன் படிக்க வேண்டும். கலைஞர்கள் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. அரசியல்வாதிகள் பிரயாணத்தின்போது கவனமாக இருக்க வேண்டாம். விவசாயிகளுக்கு சுமாரான லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், திசை : தென் மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, கிழமை : வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழன். சந்திராஷ்டம தினங்கள் : 8 முதல் 10 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். எதிலும், எங்கும் நிதானம் தேவை. பணியாளர்கள் நிதானத்தை கடைபிடிக்க வேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் புதிய முயற்சிகளை தள்ளிப் போடுவது நல்லது. பெண்களுக்கு ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். மாணவர்களுக்கு எதிர்பாராத நல்ல தகவல் கிடைக்கும். கலைஞர்களுக்கு சொத்துச் சேர்க்கை ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு குடும்பத் தொல்லை ஏற்படும். விவசாயிகளுக்கு மான்யம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 8 முதல் 10 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மகரம்



(உத்திராடம் 2, 3, 4 பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 பாதம்)

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். காதல்-திருமணம் கைகூடும். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு கௌரவ பதவி கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்கள் சொத்துக்களில் முதலீடு செய்ய வேண்டாம். மாணவர்களுக்கு அயல்நாடு செல்லும் யோகம் உண்டு. சின்னத்திரை கலைஞர்களுக்கு புதிய தகுதி கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு திடீர் பிரயாணம் ஏற்படும். விவசாயிகள் நல்ல லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 14 முதல் 16 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். திருக்கணிதப்படி ஏழரை சனி ஆரம்பம். ராசி நாதனாக இருப்பதால் அதிக தொந்தரவு செய்யமாட்டார். காதல்-திருமணத்தடை அகலும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. கணவன்-மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். பெண்களுக்கு உஷ்ண சம்பந்தப்பட்ட கோளாறுகள் ஏற்பட்டு அகலும். மாணவர்கள் அதிக கவனத்துடன் படிக்க வேண்டும். கலைஞர்களுக்கு எதிர்பாராத பண வரவு கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு வெளிநாட்டு பிரயாணம் ஆதாயம் தரும். புதிய முயற்சி விவசாயிகளுக்கு வெற்றியைத் தரும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்கள் நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 10 முதல் 13 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் 12ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரை சனி நடக்கிறது. நிதானமாக செயல்படுவது நல்லது. பணியாளர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். பெண்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் ஏற்பட வாய்ப்புண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். சின்னத்திரை கலைஞர்கள் லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு ஆன்மீக பயணம் ஏற்படும். விவசாயிகளுக்கு புதிய தொழில் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையம்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 10 முதல் 12 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## கும்பம்



(அவிட்டம் 3,4, பாதம், சதயம் பூரட்டாதி 1,2,3 பாதம்

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அஷ்டமத்தில் குடியிருப்பதால் கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. பணியாளர்கள் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு பண முடக்கள் ஏற்படும். பெண்கள் பேச்சில் நிதானத்துடன் இருப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் சோதனை ஏற்பட்டு அகலும். கலைஞர்களுக்கு கடல் பிரயாணம் ஆதாயம் தரும். அரசியல்வாதிகள் கடன் கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. விவசாயிகள் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளிம்மன், வெள்ளிக்கிழமை, நாகராஜர், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 16 முதல் 19 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ராசியில் கேது இருப்பதால் வீண் மனக் குழப்பங்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம். கணவன், மனைவி உறவு சாதாரண முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு பணமுடக்கம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தைத் தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு புனிதப் பயணம் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் ஓரளவு முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்கள் நட்பு வட்டாரத்தில் கவனமாக இருக்கவேண்டும். அரசியல்வாதிகளுக்கு சூழ்ச்சி தெரிகிறது. எச்சரிக்கை. விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் ஓரளவு நல்ல பலன்கள் நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : முருகப் பெருமான், செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளிக் கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 13 முதல் 15 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அஷ்டமத்தில் குரு இருப்பதால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கணவன்-மனைவி உறவு விரிசல் ஏற்பட்டு நீங்கும். பணியாளர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். கடல், வாணிபம், வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு லாபம் கொடுக்கும். பெண்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் கைகூடும். மாணவர்களுக்கு மதிப்பெண்கள் கூடும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிட்டும். அரசியல்வாதிகள் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. விவசாயிகளுக்கு வாகன சேர்க்கை கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, சனிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 12 முதல் 14 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மீனம்



(புரட்டாதி 4ம்பாதம் உத்திரட்டாதி, ரேவதி)

**ஜனவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறர். ராசியை குரு பார்ப்பதால் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். காதல்-திருமணம் கைகூடும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கை ஏற்படும். மாணவர்கள், கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். அரசியல்வாதிகள் கௌரவிக்கப்படுவார்கள். பொதுவாக இந்த மாதம் விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : முருகன், செவ்வாய்க்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னி மலை சித்தர், கிழமை : வெள்ளி. சந்திராஷ்டம தினங்கள் : 19 முதல் 21 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**பிப்ரவரி**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ராஜயோகம் ஏற்பட்டுள்ளது. பணியாளர்களுக்கு வெளிநாட்டுப் பிரயாணம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு கடல் பிரயாணம் ஆதாயம் கொடுக்கும். அரசியல்வதிகள் கௌரவிக்கப்படுவார்கள். விவசாயிகளுக்கு அயல்நாட்டு உதவி கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : நாகராஜன், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : அழுகணி சித்தர், பாம்பாட்டி சித்தர், கிழமை : வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 15 முதல் 18 தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**மார்ச்**

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசி நாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். காதல்-திருமணம் கைகூடும். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். பெண்களுக்கு மனத்திற்கினிய சம்பவம் நடக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு கடன் தொல்லை நீங்கும். அரசியல்வாதிகள் கௌரவிக்கப்படுவார்கள். விவசாயிகளுக்கு மான்யம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், வெள்ளிக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : சனிக்கிழமை. சந்திராஷ்டம தினங்கள் : 14 முதல் 17தேதி வரை முக்கியமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கவும்.*

**ஸ்ரீ சேஷ ஒளி**
**விளம்பர கட்டண விபரம்**

| | | |
|---|---|---|
| முழு பக்கம் | ரூ. 5,000 | (கறுப்பு/ வெள்ளை) |
| 1/2 பக்கம் | ரூ. 2,500 | (கறுப்பு/ வெள்ளை) |
| 1/4 பக்கம் | ரூ. 1,250 | (கறுப்பு/ வெள்ளை) |
| இரு பத்தி | ரூ. 500 | |
| ஒரு பத்தி | ரூ. 250 | |

# ஆராதனை விழாவின் நிகழ்ச்சிகள்

டிசம்பர் 21, 22, 2016 அன்று சேஷாத்ரி ஸ்வாமிகளின் ஆராதனை விழாவில் கணபதி ஹோமம், கோ பூஜை, சந்தான கோபால கிருஷ்ணன் ஹோமம், சுதர்சன ஹோமம், காமேஸ்வர, காமேஸ்வரி திருக்கல்யாணம் சத்குரு தங்கபாதுகை பூஜை, சௌபாக்கியலக்ஷ்மி பூஜை ஆகியவைகள் சிறப்பாக நடந்து திருவீதியுலாவுடன் ஆராதனை நிறைவுற்றது. திரளான பக்தர்கள் கலந்துகொண்டு பலன் அடைந்தார்கள்.



ஹோமத்தில் பூர்ணஹுதி காட்சி



பக்தர்கள் ஹோமத்தை கண்டு களிக்கும் காட்சி



திருக்கல்யாணம்



திருக்கல்யாணத்திற்கு சீர்வரிசை எடுத்து செல்லும் காட்சி




அறநிலையத்தின் புரவலரான
திருமதி உஷா சுவாமிநாதன்
மற்றும் அவர்களின் மகள் உமா
இருவரும் சௌபாக்கிய லக்ஷ்மி,
தங்க பாதுகை பூஜை செய்யும் காட்சி



ஹுஸ்டன் சம்யுக்தா ஹரியின் பரத நாட்டியம்



ஆஞ்சநேயரின் வடைமாலை காப்பு



திருவீதியுலா



மஹாபெரியவாளின் அனுக்ரஹம்

## போன இடம் தெரியாத வயிற்றுவலி

காட்டுப்பள்ளி எஸ்டேட் உரிமையாளர் சண்முகசுந்தர முதலியார்; அவரது மேனேஜர் கிருஷ்ணானந்தம். இருவரும் மகாபெரியவாளின் பக்தர்கள்.

1965ம் வருடம் மகாபெரியவாள் தண்டையார்பேட்டையில் முகாமிட்டிருந்தபோது, தாம் காட்டுபள்ளிக்கு விஜயம் செய்வதாக முதலியாரிடம் சொன்னார். முதலியாருக்கு அளவற்ற மகிழ்ச்சி.

கிருஷ்ணானந்தத்தின் மனைவிக்கு தொடர்ச்சியாக வயிற்றுவலி மகாபெரியவாளிடம், முறையிட்டு பிரசாதம் வாங்கிக் கொடுத்தார். இதற்கிடையில் ஒரு நாள் மகான் எப்போதோ கிருஷ்ணானந்தம் சொன்னதை நினைவில் கொண்டு ''உன் மனைவிக்கு சிகிச்சை அளிக்க வேலூர் போவதாகச் சொன்னாயே நாளையே அழைத்துப் போ'' என்று புன்சிரிப்போடு அவரைச் சோதிப்பது போலக் கூறினார்கள். அதன்படியே இவரும் தயாராகி, மனைவியை மைலாப்பூரில் ஒரு உறவினர் வீட்டில் தங்க வைத்து அடுத்த நாள் வேலூர் போகத் திட்டமிட்டார்.

ஆனால் நடந்ததோ வேறு, முதலாளியிடமிருந்து மகாபெரியவாள் அதே நாளில் காட்டுப்பள்ளிக்கு விஜயம் செய்வதாகத் தகவல் வர, கிருஷ்ணானந்தம் எல்லாம் தெய்வச் செயல் என்று மனைவியுடன் ஊருக்கே திரும்பிவிட்டார். வேலூர் பயணம் தவிர்க்கப்பட்டது. மேலும் எதிர்பாராத விதமாக காட்டுப் பள்ளியிலேயே மகாபெரியவாள் சாதுர்மாஸ்ய, வியாச பூஜையை செய்யத் திட்டமிட்டார்.

போக்குவரத்து வசதியில்லாமல் படகில் வந்து போகும் கிராமத்திற்கு இப்படி ஒரு வாய்ப்பு கிட்டியதில் எல்லோருக்கும் மகிழ்ச்சி.

மகாபெரியவாள் அங்கேயே நாலரை மாதங்கள் தங்கி, பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டு இருந்தார்.

முதலியாரின் மேனேஜர் தன் மனைவி படும்பாட்டை மகாபெரியவாள் முன் முறையிட்டார். மகான் கிருஷ்ணானந்தத்தின் மனைவியை அங்கே அழைத்து வந்து ஒரு வாரம் தங்கமுபடி சொல்ல, மேனேஜரும் அவ்வாறே செய்தார். அவரது மனைவி தினமும் குளித்துவிட்டு, பூஜைக்கு சென்றார். வயிற்றுவலி தாங்காமல் அந்தப் பெண்மணியும் கண்களில் நீர் தளும்ப அமர்ந்திருப்பார். கருணாமூர்த்திக்கு இதெல்லாம் தெரியாதா என்ன?

முதலியாரின் மைத்துனரை அழைத்து குளத்தங்கரைக்குப் பக்கத்தில் குளியலறை போன்று தற்காலிக ஏற்பாடாக தென்னங்கீற்றினால் அமைக்கப் பட்டது.

மறுநாள் அந்த அம்மாள் ஸ்நானம் செய்தபின் சுவாசினிகள் பூஜைக்கு அமர்ந்தபோது, ''இந்த அம்மாவை குளியலறைக்கு அழைத்துப் போய் இரு ஸ்டூல்களைப் போட்டு ஒன்றில் உட்காரவைத்து, அபிஷேகத் தீர்த்தத்தை பாதத்தில் படாமல் எல்லா ஜலத்தையும் சிரசில் விடுங்கள் என்றார்'' மகான்.

அபிஷேக தீர்த்தம் உதவியாள் மூலமாக அனுப்பப்பட்டது. சிரசில் நீர் கொட்டும்போது மேனேஜர் மனைவி மெய்மறந்த நிலையில் இருந்தாராம். ஸ்நானம் முடிந்தவுடன் புத்துணர்ச்சி பெற்று வயிற்றுவலி போன இடம் தெரியாமல் நீங்கப் பெற்றவராக வந்தாராம். அதற்கு பிறகு வயிற்றுவலியே அந்த அம்மையாருக்கு வரலே இல்லையாம்.

இப்படிப்பட்ட அதிசயமான அனுபவம் வேறு யாருக்கும் கிட்டியிருக்காது என்று கிருஷ்ணானந்தம் நன்றிப் பெருக்கோடு குறிப்பிடுகிறார்.

மகா பெரியவாளெனும் மாபெரும் தெய்வம் தன்னை அண்டியவர்களுக்கெல்லாம் அற்புதமான அனுபவங்களை அருளிக் காத்து நிற்கிறார்.

## பசு மடம்



பக்தர்கள் அனைவரும் பசுமடத்தை தரிசித்து பசு பராமரிப்புக்கு/தீவனத்திற்கு தாராளமாய் நிதியுதவி அளியுங்கள்.

பதினெண் சித்தர் சக்தி பீடத்திலுள்ள கோமாதாக்களில் ஒன்றை தத்தெடுத்து கோதானம் செய்யலாம்.

**விபரங்களுக்கு : 044- 24938734, 24953793**

**கோமாதாவை பராமரிக்க நிதிதனை அள்ளித் தாருங்கள்.**

## ஸ்ரீ சிவவாக்கிய சித்தர்

இவர் நமது சக்திபீடத்தில் முதல் சித்தர் ஆவார்

**போற்றிகள்**

1. பாவங்களைப் போக்குபவரே போற்றி!
2. எங்கும் வியாபித்திருப்பவரே போற்றி!
3. சிவபெருமானின் அவதாரமே போற்றி!
4. ஜீவராசிகளைக் காப்பவரே போற்றி!
5. ருத்ரனின் அவதாரமே போற்றி!
6. தீமைகளை அழிப்பவரே போற்றி!
7. சர்வ வல்லமை படைத்தவரே போற்றி!
8. ஐஸ்வர்யங்களை அளிப்பவரே போற்றி!
9. தேவர்களுக்கெல்லாம் தேவரே போற்றி!
10. சிவனின் அருள் பெற்றவரே போற்றி!
11. சிவசக்தி உருவமாகத் தோன்றுபவரே போற்றி!
12. கலைகளுக்கதிபதியே போற்றி!
13. காருண்ய மூர்த்தியே போற்றி!
14. மனநிம்மதி அளிப்பவரே போற்றி!
15. மங்களங்கள் தருபவரே போற்றி!
16. மகிமைகள் உடைய சிவவாக்கிய சித்தர் பெருமானே போற்றி! போற்றி!

## ஸ்ரீ கயிலாய கம்பளி சட்டை முனி சித்தர்

இவர் நமது சக்திபீடத்தில் இரண்டாடவது சித்தர் ஆவார்

**போற்றிகள்**

1. கயிலாயத்தில் வசிப்பவரே போற்றி!
2. ஜடாமுடிப் பிரியரே போற்றி!
3. சந்திரனை தரிசிப்பவரே போற்றி!
4. சிவசக்தியை பூஜிப்பவரே போற்றி!
5. நந்திதேவரால் காப்பாற்றப்படுபவரே போற்றி!
6. சிவதாண்டவத்தை தரிசித்தவரே போற்றி!
7. சங்கீதப் பிரியரே போற்றி!
8. தடைகளை நீக்குபவரே போற்றி!
9. காகபுஜண்டரால் பூஜிக்கப்படுபவரே போற்றி!
10. மகாலக்ஷ்மியின் அவதாரமே போற்றி!
11. முருகப் பெருமானை வணங்குபவரே போற்றி!
12. உலகத்தைக் காப்பாற்றுபவரே போற்றி!
13. சூரியன் போன்று காட்சி அளிப்பவரே போற்றி!
14. காலத்தைக் கடந்தவரே போற்றி!
15. தெய்வீகக் கோலூன்றுபவரே போற்றி!
16. கைலாயத்தில் வாசம் செய்யும் ஸ்ரீ கயிலாய கம்பளி சட்டை முனியே போற்றி! போற்றி!

**இவர்கள் சந்திரக் கிரகத்தை பிரதிபலிப்பவர்கள்**

## இந்து தர்ம சாஸ்திரம் கூறியவை

குழந்தைகள், பெண்கள், சரணடைந்தவர்கள், பசுக்கள், தான தர்மம் செய்தவர்கள், அன்னமிட்டவர்கள் ஆபத்தில் உதவியவர்கள் ஆகியோர் அதிக குற்றம் செய்திருந்தாலும் முதன்முறையாக மன்னிக்கத்தக்கவர் ஆவார்கள்.

எவன் மௌனம் சாதிக்கிறானோ, எவன் அதிகம் பேசாமல் பொறுமையுடன் இருக்கிறானோ, எவன் தன்னிடம் அதிக நியாயமிருந்தும் பிறரைக் கொண்டு பேசச் செய்யவில்லையோ, எவன் தனக்கு பலமான அடிபட்டும் எதிர்த்து தாக்கவில்லையோ, தனக்கு கெடுதல் செய்தவளை தண்டிக்க விரும்பவில்லையோ, தன்னிடம் பணம் இல்லாத சமயத்திலும் பிறரிடம் வாங்கி கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி செய்வோனோ அவனை தேவாதி வேதர்கள் ஆயுள் முடிந்தவுடன் புண்ணியலோகத்திற்கு அழைத்து செல்கிறார்கள்.

SRI SESHA OLI - R.Dis . No. 795/2006

## மருத்துவராக மலர்ந்த மஹான்

லட்சுமி அம்மாள் ஸ்வாமிகளின் தீவிர பக்தை. அடிமை. பாவம். ஒரு மாத காலம் பித்த வாத ஜுரம். படுக்கையில் போட்டு விட்டது. ஸ்வாமிகள் தினம் தினம் வரும் வீடு அது. ஏனோ அந்த ஒரு மாத காலம் அந்த வீட்டுப்பக்கம் தலையே காட்டவில்லை.

லட்சுமி அம்மாள் சுவாமி சுவாமி என்று பிதற்றினாள். அவள் பெண் செல்லம்மாள் ஸ்வாமியை தேடி ஒரு நாள் பூத நாராயணன் கோவில் வாசலில் பார்த்து காலில் விழுந்து "சுவாமி ஏன் வீட்டுக்கு வரலே. என் அம்மாவுக்கு ஜுரம் நாரா தோலா ஆயிட்டாளே . உங்களேயே நினைச்சு பிரார்த்தனை பன்னறாளே வாங்கோ" என்றாள் .

"ஓஹோ நாளைக்கு பார்ப்போம்" என்ற ஸ்வாமிகள் மறுநாள் காலை 6 மணிக்கே வந்து விட்டார். லட்சுமி அம்மாள் படுத்திருந்த கட்டில் ஓரத்தில் உட்கார்ந்தார். செல்லம்மாவுக்கும் விஷ ஜுரம் தொற்றிக் கொண்டது..

"எனக்கு தயிர் சாதம் குடு" என்று கேட்டார். முடியாமல் செல்லம்மா கொண்டு வந்து கொடுத்தாள் . ஒரு கவளம் சாப்பிட்டு. "இந்தா லட்சுமி அம்மாவுக்கு கொடு. நீயும் சாப்பிடு இதை" என்று அவர்களிடம் தந்தார். செல்லம்மாள் கொஞ்சம் கொஞ்சமாக அதைலட்சுமி அம்மாவுக்கு ஊட்டினாள். தானும் சாப்பிட்டாள். அன்று சாயந்திரம் எச்சம்மா எழுந்து உட்கார்ந்தாள். செல்லம்மாள் மறுநாள் காலை மாட்டை குளிப்பாட்டி கொண்டிருந்தாள்.

என்னவென்று சொல்வது அவருடைய லீலையை? இன்றும் மஹானின் மஹத்துவம் நடந்து கொண்டிருக் கிறது.

## இயற்கை

ஸத்குரு துணை

பல கோடி யுகங்களாக, இறைவனது பிரதிநிதியாக, கண்களுக்கு புத்துணர்வு அளிப்பதோடு, உயிர்நாடிகளின் பிணைப்பாக, நம்முள் இயங்கிக் கொண்டிருக்கும் ஜீவனோடு ஒன்றுபட்டு, ஒப்பற்ற பேரானந்த நிலையை, பூலோக உயிர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கும் பரம்பொருளின் பரிசாக, எல்லாம்வல்ல இயற்கை திகழ்கிறது.

இருப்பினும் சமீப தலைமுறைகளாக, மனிதன் இயற்கையை பாதுகாக்க முற்பட மறுத்து, அதற்கு பாதகம் விளைவிக்கும் செயல்களுக்குத் துணிந்து முடிவில் தன்னையே மாய்த்துக் கொள்கிறான். தான் ஆறறிவு படைத்தவன், என தன்னை அவன் பெருமையாக எண்ணிக் கொண்டாலும், இயற்கையின் சீற்றத்திற்கு முன்பு, திகைத்து, நிலை தடுமாறி, காற்றோடு கரைந்துவிடுகிறான். சமீபத்திய புயல் கூட அதற்கு ஒரு உதாரணம்.

ஆனால் சித்தர் பெருமக்கள், இயற்கையின் அதிசயத்தை உணர்ந்த மஹா புருஷர்கள் ஆவார்கள். எனவேதான் ஆயிரக்கணக்கான வருடங்கள் வாழ்ந்தார்கள். இப்பொழுதும் சூட்க்ஷ்ம உருவில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நம் பதினெண் சித்தர் சக்திபீட பிருந்தாவன ஆலயத்தில் குருஜி திரு. ஷர்மா அவர்கள், நிகழ்ந்த இயற்கை சீற்றத்தை முன்பே அறிந்து, பக்தர்கள் இல்லங்களிலும் வாழ்க்கையிலும், பாதிப்பு ஏற்படகூடாது என்பதற்காகவே புரோகிதர்களை கொண்டு, **"பஞ்சபூத சாந்தி ஹோமம்"** என்ற உயர்ந்த வேள்வியை செய்வித்தார்கள்.

எனவே தொடர்ந்து இத்தகைய வேள்விகளில் பங்கு கொள்வதோடு, நல்லெண்ணங்களோடு, நம் ஆலய இறை பணிகளில் பொருள் உதவியாலும், செயல் உதவியாலும் நம்மை ஈடுபடுத்திக் கொண்டு, அன்பும், மௌனமும் கூடிய பக்தி பயணத்தை தொடரும்பொழுது, இறைரூபமான இயற்கையும், நற்பலன்களை நல்கி, நம் வாழ்வின் நிழலாக நம்மை துணைகொண்டு, மேன்மையையும், உயர்நிலைகளையும் அள்ளித் தரும் என்பது உறுதி.

\- உமாபரணி


**ஸ்ரீ சேஷ ஒளி**

திருவருட்சுடர்

நிர்வாக ஆசிரியர்
குருஜி கே.வி.எல்.என். சர்மா

வெளியீட்டாளர்
திரு. கே. ராமசுப்ரமணியன்

உதவி ஆசிரியர்
திருமதி. என். ஜானகி

கௌரவ ஆசிரியர்கள்
திரு. மருதபரணி
திருமதி. உமாபரணி

அலுவலக உதவியாளர்
திருமதி. பி. லக்ஷ்மி

வடிவமைப்பு
திருமதி. பிரேமா

பதிவு அலுவலகம்
ப.எண். 21/3, பு.எண். 43,
அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை – 600 004.
போன் : 04424938734, 24953793
இணைய தளம் : www.seshadri.info
Email: guruji@seshadri.info


## டிரஸ்டின் வெளியீடுகள்

1. ஸ்ரீசக்ர மகாமேரு 18 சித்தர்கள் சக்திபீட பிருந்தாவன ஸ்தல வரலாறு (தமிழ், ஆங்கிலம்)
2. மகான் திருவுருவம் பதித்த டாலர், பேனாக்கள் மற்றும் சிறிய, பெரிய படங்கள்
3. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் 18 சித்தர்கள் பூஜை முறைகள்
4. ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் மகாத்மியம் (தமிழ், ஆங்கிலம்)
5. The Glory of Sakthi Peetam
6. ஸ்ரீ கிரஹலட்சுமி (வாஸ்து தோஷம் போக்கும் படம்)
7. ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் (அபூர்வ படம்)
8. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸத்குரு பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
9. ஸ்ரீ சக்ர மஹாமேரு அம்பிகை பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
10. ஸத்குருவும் சக்தி பீடத்தின் மஹிமையும்

## அறக்கட்டளையின் இதர சமூக நற்பணிகள்

**பால் விநியோகம் :** பிரதி ஞாயிறு தோறும் சக்திபீட பாலாலயத்தில் குழந்தை களுக்கு பால் விநியோகம் நடைபெறு கிறது. இந்த அரிய கைங்கர்யத்தில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் ரூ. 500 செலுத்தி தாங்களே நேரில் வந்து கொடுக் கலாம்.

**இதனால் ஏற்படும் பலன்கள் :**

குழந்தைகள் நன்றாகப் படித்து அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள்.

தேர்வு சமயத்தில் ஏற்படும் வீண் பயம் நீங்கி மனத் தெளிவு ஏற்படும்.

தீராத வியாதிகள் தீரும், சித்தர்கள் அருள் கிடைக்கும்.

இலவச பால் விநியோகத்திற்கு நன்கொடை அளித்து ஸ்ரீ கிருஷ்ணனின் அருளையும் மகானின் அருளையும் சித்தர்களின் அருளையும் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**நித்திய அன்னதானம் :** சக்தி பீடத்தில் நித்திய அன்னதானம் வழங்கப்படுகிறது. வடை பாயசத்துடன் சிறப்பு அன்னதானம் ரூ. 2500 நன்கொடை களுக்கு வருமான வரிவிலக்கு 80G உண்டு.



தானத்தில் சிறந்தது அன்னதானம்
அன்னதானம் செய்வோம்
ஆனந்தம் அடைவோம்

## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

**அன்பார்ந்த சேஷ ஒளி வாசகர்களே**

மூன்று மாதத்திற்கு ஒரு முறை பிரசுரமாகும், சேஷ ஒளியைப் படித்து விட்டீர்களா? உங் களுடைய கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். குறை இருந்தால் திருத்திக் கொள்வோம். நிறை இருந்தால் மகிழ்ச்சி அடை வோம். ஸத்குருவின் அருளை அனுபவித்த அன்பர்கள், தங்களுடைய அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் பலரும் அறியும் வண்ணம், சேஷ ஒளியிலும் வெளி யிடுவோம். தங்கள் பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன், அனுப்புங்கள்.




அனுப்ப வேண்டிய முகவரி :
பழைய எண். 21/3, புதிய எண். 43, அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை 600 004.
தொலைபேசி : 04424938734, 24953793, 9445232505

Publisher Mr. K. RAMASUBRAMANIAM from New No. 43, Alamelumangapuram, Mylapore, Chennai - 600 004
and Printed by him at Icon Graphics, Chennai-5.